# விடியல்

## The Dawn

மாத இதழ், பொழுது – 62
ஜுன், 2014
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



சிறப்பாசிரியர்
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

ஆசிரியர்
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

இணை ஆசிரியர்
ம.லோகேஸ்வரன்
தமிழ் உதவிப் பேராசிரியர்

ஆசிரியர் குழு
தமிழ் உதவிப் பேராசிரியர்கள்



வெளியீடு:

தமிழ்த்துறை

கே.எஸ். ரங்கசாமி
கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
தமிழ்நாடு, இந்தியா.
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu



©K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.


## எதிர்பார்ப்பு

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு எனும் தகுதியைப் பெற்ற நாடு நம் இந்தியா. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதில் உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டாய் திகழும் பாரதத் திருநாடு புதியதொரு ஆட்சி, அதிகாரத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மோடி அரசு மீதான எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் மக்களிடையே அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

கட்சிக் கொள்கைகள் மறைக்கப்பட்டுத் தனியொரு மனிதர் மீதான எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் சரியானதுதானா? எனும் விவாதத்தினைச் சிற்றிதழ்கள் முன்னெடுத்துச் செல்கின்றன.

பத்து அம்சத் திட்டங்கள்,சார்க் நாட்டுத் தலைவர்கள் அழைப்பு, சுகாதார விழிப்புணர்வு,சமூக வலை தளங்கள் மீதான கவனம் மாநிலப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை முதலான நடவடிக்கைகளின் மூலமாக எதிர்பார்ப்புகள் மேலும் மேலும்அதிகரிக்கத்தான் செய்கிறது. எதிர்பார்ப்போம் அதற்கு முன்பு கொஞ்சம் பொறுத்திருப்போம்...

# உள்ளுறை..

**கவிதை**


கவியே உம்மை ஆராதிக்கிறேன் -3
சுதந்திரநாட்டின்அடிமைகள் - 3
ஒவ்வொரு நாளும் - 4
அன்னை -5
வாய்க்கரிசி -9
முதல் கவிதை -13
கல்லூரியின் கடைசி நாள் -16
நட்பு –4,16,19,26,28
அனுபவங்கள் -17
வாழ்க்கை -17
அழகிய தருணங்கள் -17
சமத்துவம் -19
பொம்மை -21
அன்பு -23
இரவின் மடியில் -23
மெழுகுவர்த்தி -24
வெற்றி யாருக்கு? -24
பிச்சைக்கார பெருந்தகை -24
விடியல் -25
மழை -25
பசுமை வெறும் கனவே -26
ஆசை -26
தாய் -27
சலவைத் தொழிலாளி -29
நினைவு ஒன்று போதும் -29
தோழி -29
கருவறை முதல் கல்லறை வரை -29
உயிர் -29
பிரிவு -30
போராளி -30
மறதியும் நட்பும் -30
சேர்வோம் -31


**கட்டுரை**


புவி வெப்பமயமாதல் -5
இந்தியாவில் ஆங்கிலக் கல்வி -17
ஆடை வடிவமைப்புத் துறையில் சாதனை படைத்தவர் -19


**குறிப்புகள்**


நாடகத்தந்தை - 4


**சிறுகதை**


சிறந்த ஞானியின் கதை -9
ஜென் தத்துவம் -15
வல்லவனுக்கும் வல்லவன் -21
பொறாமை -27
பரிசு தரவில்லையே -31


**அறிந்து கொள்வோம்**


எழுத்தாணி -13

## கவியே உம்மை ஆராதிக்கிறேன்

*நாடு என்னும் சோலையிலே*
*பூத்துக் குலுங்கிய நந்தவனமோ!*
*பெண்ணுரிமைக்குப் பாடுபட்ட*
*வீரக் கவிஞனே!*
*உம் தமிழால் என்னை ஈர்த்தாய்*
*உன் வார்த்தைகளோ*
*தேனினும் இனியது*
*எட்டயபுரத்தில் பிறந்து*
*இமயத்தையே எட்டிப்பிடித்த*
*கவிஞனே!*
*சாதிகள் இல்லையெனக் கூறி*
*அர்த்தமோடு வாழ்ந்தவரே*
*தலைகுனிந்து நீர் எழுதிய*
*கவிதையே*
*அனைவரையும் தலைநிமிரச்*
*செய்துள்ளது*
*வெள்ளையனிடம் அடிமைப்பட்ட எம்மை*
*விழிக்கச்செய்தது உம் கவியே*
*மண்ணைப் பார்த்து நடந்த பெண்ணை*
*தலைநிமிர வைத்தது உம் கவியே*
*ஒற்றுமையே உம் வேத வாக்கு*
*தாய்மையின் வடிவை இனிய தமிழால்*
*உணர்த்தியது உம் கவியே!*
*தமிழின் விதையாக நீர் இருக்க*
*பல மரமாக எழுந்த கவிஞர்கள் பலர்*
*தேனினும் இனியது தமிழ்*
*தமிழினும் இனியது உம் கவியே!*
*பூவில் இருக்கும் பனித்துளிப் போல்*
*அத்தனை அழகு உம் கவி!*
*கவியே உம்மை ஆராதிக்கிறேன்..!*

***தி.ஷாகினா***
*இளங்கலைஇரண்டாமாண்டுவேதியியல்*

## சுதந்திர நாட்டின் அடிமைகள்

*இந்திய நாட்டின் சுதந்திரம்*
*வாங்கிய சுதந்திரத்தை*
*வட்டிக்குவிட்டோம்*
*லஞ்ச வெள்ளத்தில் நீந்திக்*
*கிடக்கின்றோம்*
*ஊழலில் ஊறி உதைப்பட்டுக்*
*கிடக்கின்றோம்*
*உண்மையைச் சொன்னால்*
*குற்றவாளி*
*மறைத்தால் நீ தான் அறிவாளி*
*கொடுமையைக் கண்டேன்*
*கண்ணை இழந்தேன்*
*பெண்ணைக் காக்கத் தானே*
*ஆணைப் படைத்தான்..*
*அவள் பெண்மையை அழிக்கவா*
*படைத்தான்?*
*கடுங்காவல் இருந்தும்*
*கஷ்டப்படுகிறோம்*
*கவலைப்படுகிறோம்*
*கொலை கொள்ளையை நினைத்து*
*எத்தனையோ காலம்*
*சிறைப்பட்டுக் கிடந்தோம்*
*ஆங்கிலேயரிடம்..*
*வெள்ளையனை விரட்டியடித்தோம்*
*வெள்ளை வேட்டியிடம்*
*மாட்டிக்கொண்டோம்*

இன்னொரு காந்தி உடனே வேண்டும்
அகிம்சைப் போராட்டமா அநியாயம்
ஆயுதப் போராட்டமா தீவிரவாதம்
உண்ணாவிரதமா உயிர் போய்விடும்
ஆகவே
மாணவர் சக்தியே மாபெரும் சக்தி
மாற்றிவிடுவாய் பாரதத்தை
வென்றுவிடுவாய் வெள்ளை
வேட்டிகளை
புதிய சரித்திரத்தில்
பூலோகம் பூத்துக் குலுங்கட்டும்

**பெ.லோகநாதன்**
இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

## நட்பு..!

நீ விலகி போகையில்..
இருள் நீங்கி போகையில்
வெளிச்சம் வந்து கேட்குமா
இமைகள் கடந்து போகையில்
விழிகள் வந்து பேசுமா..?
அலைகள் கடந்து போகையில்
மணல்கள் வந்து கேட்குமா..?
நீ விலகி போகையில்
நட்பே!
என்னை நான் கொல்லவா..?

**சி.தாரணி**
வணிக மேண்மைத்துறை
இளங்கலை மூன்றாமாண்டு

## ஒவ்வொரு நாளும்

தடம் மாறிய பயணங்கள் கூட
புதிய அனுபவங்களைத் தரும் போது
தினசரி வாழ்க்கையில்
ஏன் அலுப்பிற்கும் சலிப்பிற்கும்
இடம் தர வேண்டும்..?
திசையின்றி வீசும் தென்றலை
இரவிப்பது போல
தினங்களை இரசித்திடுங்கள்...

**பிரசாந்த்**
துகிலியல்மற்றும்ஆடைவடிவமைப்புத்துறை
இளங்கலை முதலாமாண்டு

## நாடகத் தந்தை

பம்மல் சம்பந்த முதலியார் 1873 ஆம் ஆண்டு சென்னையில் பிறந்தார். சட்டம் பயின்று வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1924 ஆம் ஆண்டு முதல் 1928 ஆம் ஆண்டு வரை நீதி மன்றத்தலைவராகப் பதவி வகித்தார். தமிழ் மொழியன் மீதும் நாடகத் துறையின் மீதும் கொண்டுள்ள ஈடுபாட்டால் 1891 ஆம் ஆண்டு ஜுலையில் சென்னையில் சுகுனவிலாசச் சபை என்னும் சபையை நிறுவி பிற்கால நாடகத் துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிந்தார்.

மேலைநாட்டு நாடக மேடைகளில் அரங்கேறிய ஷேக்ஸ்பியரின் நாடகங்களைத் தமிழ் நாடகங்களாக மொழி பெயர்த்தார்.

*1963 இல் பத்மபூஷன் பட்டம் பெற்றார். தமது 81 ஆவது வயது வரை நாடகத்துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருந்தார்.*

## குறிப்புகள்

*1912 ஆம் ஆண்டுதான் தமிழகத்தில் பல்கலைக்கழகப் பட்டங்களில் வேந்தருக்குப் பதில் துணைவேந்தர் கையெழுத்திடும் முறை வந்தது.*

*1912 ஆம் ஆண்டில் உலகப் புகழ்பெற்ற டைட்டானிக் கப்பல் அட்லாண்டிக் கடலில் மூழ்கியது.*

*1912 ஆம் ஆண்டு சீனா குடியரசானது.1913 ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு இரவீந்திரநாத் தாகூருக்கு வழற்கப்பட்டது.*

*1913 ஆம் ஆண்டு பத்திரிகைகளில் வெளியாகும் குறுக்கெழுத்துப் போட்டி முதன்முதலில் நியுயார்க் வேர்ல்டு இதழில் வெளியானது.*

**மா.கார்த்திகேயன்**
*தமிழ்த்துறைத் தலைவர்*

## அன்னை

*அன்பின் உருவமாய்*
*ஆனந்தத்தின் இருப்பிடமாய்*
*பண்பின் ஒளியாய்*
*பாசத்தின் வழிகாட்டியாய்*
*திறமையின் திறவுகோலாய்*
*தெய்வத்தின் இருப்பிடமாய்*
*இருப்பவள் தான்*
*அன்னை..!*

**அ.ஜெனித்தா**
*இளங்கலை முதலாண்டு*
*கணினிப் பயன்பாட்டியல் துறை ஈ பிரிவு*

**கட்டுரை-1**

## புவி வெப்பமயமாதல்

**முன்னுரை**

*உலகம் முழுவதும் கடந்த வாரம் "உலக ஓசோன் தினம்" என்ற ஒன்றை செப்டம்பர் 16 இல் கொண்டாடினோம்,எதற்காகவென்றால் நம் முன் தற்போது இருக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல் இந்தப் புவி வெப்பமயமாதல் அல்லதுஉலக வெப்பமயமாதல் என்பது தான். இந்தப் புவி வெப்பமயமாதல் மனிதர்கள், விலங்குகள் மற்றும் உணவு ஆதாரமான விவசாயத்தின் மீதும் ஏற்படுத்தி இருக்கும் பதிப்புகள் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கிறது. இதில் மிகவும் முக்கியமான ஒன்று என்ன வென்றால் இது மக்கள் தொகையில்ஏற்படுத்தி இருக்கும் பாதிப்புகள் மிகவும் விபரீதமாக இருக்கிறது. இந்த உண்மைகளை பற்றி அவ்வப்போது விவாதங்கள் நடந்த வண்ணம் உள்ளன, இதில் துரதிஷ்டவசமாக இதற்கான*

காரணம் நாம் இல்லை என்று வாதிட்டாலும், காரணங்களை ஒத்துக்கொள்ள மறுத்தாலும், உலக வெப்பமயமாதலின் விளைவுகள் உண்மை என்றும், இந்தப் பாதிப்பு என்பது உலகளாவியது என்றும், அளவிடக் கூடிய பெரிய பாதிப்பு என்றும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். உண்மையில் இதற்கான காரணங்கள் நாமும், நம்முடைய போட்டி மனப்பான்மை கொண்ட வளர்ச்சியும்அன்றி வேறு இல்லை என்பதும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. இதற்கான விளைவுகள் எந்த சந்தேகமும் இன்றி கடுமையானதாகத் தான் இருக்கும் என்றும் விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

**புவி வெப்பமயமாதல் என்றால் என்ன?**

புவிவெப்பமயமாதல் என்பது பூமியினுடைய சுற்றுப்புறப் பகுதிகளிலும், கடல் பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கும் வெப்பநிலை உயர்வைக் குறிக்கிறது. இது கடந்த 20 ஆம் நூற்றாண்டின் பாதியில் இருந்து இப்போது வரை தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு விளைவு. குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வகையில் பூமியின் வெப்ப நிலை 1oC to 4oC ஆக உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.உலக சராசரி வெப்பநிலை உயர்வு 2100 ஆம் ஆண்டில் 4°C (7.2°F) ஆக இருக்கும் என்று விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

**புவி வெப்பமயமாதல் காரணம் என்ன:**

முற்காலத்தில் நாம் வெளியிடும் கார்பன்-டை-ஆக்சைடை உட்கொள்ளவும்நாம் உட்கொள்ளும் ஆக்சிஜனைகொடுக்கவும் ஏராளமான தாவரங்களும், மரங்களும் இருந்தன, ஒரு இயற்கை சமநிலை இருந்தது, ஆனால் தற்கால தவறான மனித செயல்பாடுகளால் இயற்கையைப் பாதிக்கின்ற ''பசுமைக் கூடக வாயுக்கள்'' அல்லது ''பசுமைக் குடில் வாயுக்கள்'' என்று சொல்லப்படுகின்ற வாயுக்களின் அதிகரிப்பால் இந்த பூமியின் வெப்பநிலை கணிசமாக உயர்ந்துள்ளது. இந்த வாயுக்கள் சூரியனில் இருந்து வரும் வெப்பக் கதிர்வீச்சுக்களை எந்த தடையும் இன்றி உட்செலுத்தியும் பூமி வெளியேஎதிரொலிக்கும் வெப்பத்தை வெளிவிடாமல் செய்வதால் இந்த விளைவு ஏற்படுகிறது.

**பசுமை கூடக வாயுக்கள் எவை:**

• கார்பன்டைஆக்ஸைடு (CO2), மீத்தேன் (CH4), நைட்ரஸ்

ஆக்ஸைடு ($N_2O$), ஹைட்ரோ ஃபுளோரோ கார்பன் (HFCs), பெர்ஃ புளோரோ கார்பன் (PFCs),சல்பர் ஹெக்சா ஃபுளோரைடு($SF_6$)

**பசுமைக் கூடக வாயுக்கள் எங்கிருந்து தோன்றுகின்றன?**

மக்கள் தொகை பெருக்கத்தினாலும், அதன் மூலமாக மனிதர்களின் அதிகரித்து வரும் மின் பயன்பாடு,அதன் விளைவாக எரிக்கப்படும் நிலக்கரி மற்றும் எரி பொருள்களினால் வெளியேற்றப்படும் வாயுக்களாலும், மனிதர்களின் அதிகரித்து வரும் வாகனப் பயன்பாடுகளும்,அதன் விளைவாக வெளியேற்றப்படும் வாயுக்களாலும், இயற்கையாக மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் மூலமாக வெளிப்படும் மீதேன் என்னும் வாயுவினாலும், காடுகள் அழிக்கப் படுவதாலும், செயற்கை உரங்களின் பயன் பாடுகளாலும்,அதிகமான பிளாஸ்டிக் மற்றும் மின்னணு கழிவுகளாலும் இந்த பசுமைக் கூடக வாயுக்கள் அதிகமாகத் தோன்றுகின்றன.

**புவிவெப்பமயமாதலின் விளைவுகள்:**

வரலாறு காணாத முறையில் அதிகரித்து வரும் வெப்பநிலை, உயர்ந்து வரும் கடல் மட்டம், வட துருவத்தில் குறைந்து வரும் பனியின் அளவு ஆகியவற்றின் மூலம் தெளிவான பின் விளைவுகள் தெரிய துவங்கிவிட்டன.

**உலகளாவிய விளைவுகளில் சில :** கென்ய மலைப்பகுதிகளில் உள்ள மிகப்பெரிய பனிமலையில் அதன் எடையில் 92% குறைந்து விட்டது.

- கடல் மட்டம் 10 முதல் 25 சென்டிமீட்டர் வரை அதிகரித்துள்ளது.
- ஆர்டிக் பகுதிகளில் பனியின் தடிமன் 40% குறைந்துள்ளது.
- ஒரு ஆய்வறிக்கை இன்னும் 100 ஆண்டுகளில் 300 கோடி மனிதர்கள் இடம்பெயர்வதற்கான சாத்தியக் கூறுகள் 90% உள்ளதாகச் சொல்கிறது. உணவு பொருள்களின் தட்டுப்பாடும் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.
- விஞ்ஞானிகள் இப்போது திட்ட வட்டமான ஆதாரங்களை சேகரித்துள்ளனர், அதன்படி, இனி வரும் காலங்களில் வழக்கத்திற்கு மாறான கடுமையான புயல்களும் அதன் விளைவாக கடுமையான சூறாவளி காற்றும் இருக்கும் என்றும்,இதன் விளைவுகளை 1981 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களால் உறுதி செய்து உள்ளதாகவும் கூறுகின்றனர்.

•நேர்முகமாகவோ ,மறைமுகமாகவோ ஒவ்வொரு ஆண்டும் 3 லட்சம் மனிதர்கள் இந்த விளைவினால் உயிரழந்து வருவதாகவும் மற்றொரு ஆய்வறிக்கை கூறுகிறது.

• இன்னொரு ஆய்வறிக்கை 2050 ஆம் ஆண்டிற்குள் 10 லட்சத்திற்கும் அதிகமான உயிரினங்கள் இந்த பூமியில் இருந்து அழிந்திருக்கும் என்றும் கூறுகிறது.

•இந்த விளைவுகள்மோசமானால், WWF ஆய்வறிக்கைப் படி, 2100 ஆம் ஆண்டிற்குள் கடலில் உள்ள பவளப்பாறைகள் முற்றிலுமாக அழியக்கூடும், அப்படி நேர்ந்தால் இது கடல் வாழ் உயிரினங்களுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கும்.

**இந்தியாவில் உணரப்பட்ட விளைவுகள்**

•இந்தியாவில் இமயமலையில் தோன்றும் கங்கை நதியின் ஆதாரமான பனிப்பாறைகளின் அளவு 40 மீட்டர் என்ற அளவில் ஒவ்வொரு வருடமும் குறைந்து வரைகிறது.இது கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் இருந்த அளவை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.இதில் உள்ள சில பனிபாறைகள் 2030 ஆம் ஆண்டிற்குள் முழுவதுமாக மறையக்கூடும் என்றும் இதனால் மிக பெரிய குடிநீர் பஞ்சத்தை ஆசிய நாடுகள் சந்திக்க கூடும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது.

•இதே போன்று ஒரிசாவில் ''சடவய'' என்ற கடலோர பகுதியில் முன்பு 7கிராமங்கள் இருந்த பகுதி இப்போது2 கிராமங்களை மட்டுமே கொண்ட பகுதியாக காட்சி அளிக்கிறது,இதில் 5 கிராமங்கள் கடல் நீரில் மூழ்கி விட்டன.மேலும் ஒரிசாவின் கடலோர பகுதியில் புயல்களுக்கும் அதன் விளைவான கடுமையான சூறாவளிக்கு மட்டும் 30000 மனிதர்கள் இறந்துள்ளதாக ஒரு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. கடல் நீரின் அளவு சில பகுதிகளில் 1.5 முதல் 2.5கிலோமீட்டர் என்ற அளவில் நிலப் பகுதியில் உட்புகுந்துள்ளன. இவை எல்லாம் சில உதாரணங்கள் மட்டுமே, உண்மையான பாதிப்புகள் முழுமையாக இன்னும் உணரப்படவில்லை, அவை எந்த சந்தேகத்திற்கும் இடம் இன்றி மிகவும் கடுமையானதாகத் தான் இருக்கும்.

**தீர்வுகள்:**

மனிதர்களும், மனிதர்களின் செயல்களும் தான் உலக வெப்பமயமாதலின் முழு காரணம் என்பது தெளிவு, இதற்கான முழு தீர்வுகள், அரசியல், பொருளாதார

மற்றும் சமுதாய அமைப்புகளில் ஏற்பட வேண்டிய மாற்றத்தினால் மட்டுமே சாத்தியமாகும்.

பசுமைக் கூடக வாயுக்களை நிறுத்தினாலும், வெப்ப உயர்வு உடனே நின்று விடாது,காலத்தால் இந்த வெப்பநிலை குறைவதற்கு இன்னும் சில காலமாகும்.இப்போது உலக அளவில் இந்த வாயுக்களின் அளவை 450 முதல் 550 PPM ஆக நிறுத்துவது(குறைப்பது) தான் முதல் தீர்வாகக் கொண்டுள்ளனர். இதன் தற்போதைய அளவு 380 ஆக உள்ளது. அரசாங்கமும், பல சமூக அமைப்புக்களும் இந்தப் பணியில் தீவிரமாகப் பணி ஆற்றிவருகின்றன, இன்னும் முக்கியமான சில மாற்றங்களான, இயற்கை வேளாண்மை,சூரிய சக்தி,இயற்கை பொருள்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், சுற்றுச்சூழல் சீர்கேட்டைத் தடுக்கும் நடவடிக்கைகள், இவற்றினால் மட்டுமே இதன் தாக்கத்தைக் குறைக்க முடியும். இப்போது நம்முடைய பங்களிப்பைத் தெரிந்து கொள்ளவேண்டிய நேரம் இது. நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய வேலை இந்தத் தாரக மந்திரத்தைக் கடைபிடிப்பது தான்

**வ.கார்த்திக்**
உதவிப்பேராசிரியர்
ஆடை வடிவமைப்பு , துகிலியல்துறை

## வாய்க்கரிசி

நடப்பதற்குத் திராணியின்றி
செத்துக்கிடக்கின்றோம்..
நா நனைத்துக்கொள்வோம்
எப்போதாவது வரும்
கண்ணீர்த்துளிகளால்..
ஹோமியமும் மலங்களும்
எங்களது அன்றாட
கையேந்திபவன்கள்..
இதோ!
இது கடைசியாக இறக்கப்போகும்
சோமாலியனின் குரலாக
இருக்கலாம்..
வறுமைக்கோட்டைப் பேசும்
வசதியாளர்களே…!
எங்களைத் துப்பாக்கிக்
குண்டுகளால்
சுட்டுத் தள்ளுங்கள்..
உங்களின் ஆதரவு வார்த்தைகளை
இனியும் நம்பத் தயாராக இல்லை..
வாக்களித்த எங்களுக்கு
வாய்க்கரிசியாவது மிஞ்சட்டும்…!

**பி.மோகனபிரியா**
உயிர்த்தொழில்நுட்பவியல்துறை அ பிரிவு
இளங்கலை இரண்டாமாண்டு

**சிறுகதை**

## சிறந்த ஞானியின் கனவு

அன்று இரவு முழுவதும் கண் விழித்துக் கொண்டு தன்காதலி

கயல்விழி நினைவால் வாடிக் கொண்டிருந்தான் செல்வந்தரின் மகன் ஞானி.

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. கையில் ஒரு பெட்டியுடன் கண்களில் காதலியின் வரவை எதிர்பார்த்தும், வாசலின்தூரத்தை, தன்தூக்கத்தை மறந்தும் பார்த்துக் கொண்டிருக்கிறான் அவன்.

வெகுதூரத்தில் இருந்து நாய்கள் சத்தம் வௌவ், வௌவ்….. என்று அவன் காதுகளில் கேட்கிறது...

ஓ! தன் காதலிதான் வருகிறாள் ஓடிவிடலாம் என நினைக்கிறான். அவனது பார்வை ரோட்டையே பார்த்தபடி இருந்தது.

ஊர்க்காவலன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான்.

''ஞானியின் மனம் வாடியது''

எங்கே தன்காதலி வரமாட்டாளோ? என்ற எண்ணம் மனதில் ஒருபுறம் தோன்றியபடி இருந்தாலும் தன்காதலி தனக்குத் துரோகம் செய்யமாட்டாள் என்பது ஞானிக்குத் தெரியும்.

சற்றுநேரம் கழித்துக் கொலுசு சத்தம் சல,சல எனக் கேட்டது. அருகில் தன்காதலி பெட்டியுடன் வந்தாள் இருவரும் விடிவதற்குள் தன் ஊரைவிட்டு வெளியூருக்குச் செல்ல முடிவெடுத்தனர்.

யாருடைய மகன் என்று தெரிந்ததால் அவனுக்கு அங்கு தங்க வீடு கிடைத்தது.

விடிந்தது, ''சில்லென்று குளிர்'' ஞானி தன் போர்வையை மூடியபடியே கண்விழித்துப் பார்க்கிறான்.

வீட்டின் கதவுதட்டும் சத்தம் மெதுவாகக் கேட்க வீட்டின் உரிமையாளர்தான் தட்டுகிறார் என நினைத்து கதவைத் திறக்க நினைக்கயில் வெளியே ஒருபெரும் கூட்டம் இருப்பதுபோல் சத்தம் கேட்டது ஞானியின் காதுக்கு.

கதவைத் திறக்கிறார் ஞானிக்கு ஓர் அதிர்ச்சி! வெளியே தன்தந்தையும், உறவினர்களும் நிற்கின்றனர்.

அவ்வூரின் தலைவர் தன்தந்தைக்குத் தகவல் கொடுத்து விட்டார் என்பதை யூகிக்க அவனுக்கு அதிகநேரம் ஆகவில்லை...

அவன் தந்தையோ தனக்கு ஒரே மகன் என்பதால் இருவரையும் சேர்த்து வைக்க முடிவு செய்கிறார். ஓர் நந்நாளில் திருமணம் பெரியோர்கள் ஆசியுடன் இனிதே நடந்தது.

நாட்கள் கழிந்தன. ஞானிக்கு ஓர் அழகிய குழந்தை ஒன்று பிறந்தது.

*தங்கள் செல்வத்தைக் காட்டிலும் அக் குழந்தையிடம் காட்டிய அன்பு அக்குடும்பத்தில் அதிகம் காணப்பட்டது. வீட்டின் வெளியே அய்யா, அய்யா..என்ற சத்தம்*

*யாரது என்றபடி வெளியே வந்த கயல்விழி கண்ணீர் மழையில் நனைகிறாள். ஆழ்ந்த சந்தோசத்துடன் தன்தாய், தந்தையைப் பார்க்கிறாள்.*

*இதற்கிடையில் செல்வந்தர் மருமகளே! ஏம்மா மருமகளே.. எனக்கு காபி ஒன்னு போட்டுக் கொடும்மா என்கிறார்.*

*எங்கே தன் தாய், தந்தை வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்தால் மாமனார் கோபப்படுவாரோ என நினைத்து வேகமாக உள்ளே செல்கிறாள் படியில் டப்,டப்... என்று சத்தம் பார்த்தால் மாமனார் கீழே வந்து விட்டார்*

*என்னாச்சிமா! ஏ! இப்படி ஓடி வர யாரு வந்திருக்காங்க? என்றபடி வெளியே பார்க்கிறார் கண்ணீருடன் வெளியே இருந்தவர்களைப் பார்த்தவுடன் அவர்கள் யார் என்று தெரிந்துகொண்டார்..*

*உள்ளே வாருங்கள் என்று சொன்னவுடன் கயல்விழிக்கு பயம் திடுக்கிட்டது. என்ன நடக்குமோ? என்று மனதுக்குள் புலம்பியவாறு சமையலறைக்குச் சென்றாள்.*

*மாமனார் கயல்விழியைக் கூப்பிட்டு வந்தவர்களுக்குத் தண்ணீர் கொடும்மா என்றார்..*

*பயம் ஒருபக்கம் இருக்க! சந்தோசம் ஒருபக்கம் இருக்க! தண்ணீர் கொண்டு வருகிறாள்..*

*அதற்குள் இருவரிடையே சமாதானம் ஆகி ஒன்றாகி விட்டார்கள். சந்தோசத்துடன் செய்ய வேண்டிய தன்பணிகளை அவ்ஏழைச் சம்மந்தி தன்னால் முடிந்த சீர்களைச் செய்து விட்டு வாழ்த்தி வீடுதிரும்பினர்..*

*கயல்விழி கதவில் சாய்ந்தபடி தன்தாய், தந்தையைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அழாதம்மா என்றபடி மாமனார் உள்ளே அழைத்துச் செல்கிறார்.*

*சோபாவில் அமரச்செய்து இப்படித்தான் என்றவாறு தன் கதையைச் சொல்ல ஆரம்பிக்கிறார் மாமனார். ஒரு பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவள் உன் மாமியார் நான் ஒரு கூலித் தொழில் செய்யும் ஒருவரின் மகன்.*

*சிறுவயதிலேயே வருமானம் இன்றி தன் தந்தை தொழிலான கூலித் தொழிலில் ஈடுபட்டேன்.*

*ஒவ்வொரு நாளும் தொழிலுக்குச் செல்லும் போது உன் மாமியாரை நான் சந்திப்பேன். எங்கள்*

இருவருக்கும் இடையே காதல் மலர்ந்தது .

ஆனால், திருமணம் நடக்குமோ என்ற அச்சத்தில் நாங்கள் இருவரும் திருமணம் செய்து வந்து இங்கு வாழ்கிறோம்..

உன் மாமியாரோடு வாழ்ந்த வாழ்க்கை என்னை இந்த அளவுக்கு செல்வந்தனாக்கியது என்று கூறிக் கொண்டிருக்கும் போது ஆபிசுக்கு செல்வதற்காக ஞானி படியில் இறங்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்து சரிம்மா நீ போய் உன் கணவரை வழி அனுப்பி விடும்மா என்றார்.

எல்லாம் நல்லதுக்குதான்னு நினைச்சி நீயும் நல்லபடியா வாழனும்மா, வாழ்ந்து காட்டனும் என்றார் மாமனார்.

நாட்கள் பல கழிந்தது. குழந்தை துள்ளிக் குதித்த காலம் அக்குழந்தைக்கு எதிர்பாராத விதமாக செல்வமிருந்தும் குணமாக்க முடியாத நோய் வந்து விடுகிறது.

இதனால் அக்குழந்தை பலனின்றி இறந்து விடுகிறது.

செல்வந்தர் வீட்டில் இடியும், மின்னலும் வெடித்ததைப்போல் கண்ணீர்மழை பொழிந்தது. ஆனால்,

''ஞானி மட்டும் அழவில்லை''

வீடு முழுவதும் குண்டூசி சத்தம் இன்றி சோகத்தில் மூழ்கின வழக்கம் போல் ஆபிசுக்கு கிளம்புவதற்காக ஞானி கிளம்புகிறான்.

கயல்விழி பார்கிறாள். கோபம் தலைக்கேறியது ஏன் இப்படி இருக்கிங்க? நம் குழந்தை நம்மை விட்டுப் போய்விட்டது என்ற வருத்தமே உங்களுக்கு இல்லையா? என்று கேட்டாள்.

தன் சட்டைப் பொத்தானைப் போட்டவாறு அப்படியே சோபா பக்கம் நெருங்கிய ஞானி அமைதியான நிலையில் அமர்ந்தார்.

மேல் மாடியில் இருந்த செல்வந்தர் படியில் இருந்தபடி பார்க்கிறார்.

வீட்டின் கடிகாரமணி ஓசை டக்,டக் என்று கேட்கிறது. காலை 8 மணி ஆயிற்று. கீழே வந்து தனது மகன் ஞானி அருகே அமர்ந்தார்.

தன் மகனின் வருத்தத்தை உணர்ந்த அவர் மெதுவாக அணைத்து கவலை வேண்டாம் என்றவாறு குறிப்பிடுகிறார்.

இருந்தாலும் ஏன் அழமாட்டிங்கிறாய்? என்று கேட்டார்.

மெதுவாக நிமிர்ந்த ஞானி, நம் குழந்தை துள்ளிக் குதித்த அன்று இரவு நான் ஒரு கனவு கண்டேன் என்றார்.

''தன் கனவை சொல்ல ஆரம்பித்தார்''

கயல்விழியும் சற்று நிமிர்ந்து அமர்ந்தாள் விடியற்காலைப் பொழுதில் நான் கண்ட கனவில் உனக்கு இரட்டைக் குழந்தை பிறந்தது.

அக்குழந்தையை கண்ட நான் அன்போடுகொஞ்சுவதற்காகப் பக்கத்தில் சென்று தொட ஆரம்பித்தேன்.

அப்போதுதான் கதறல் சத்தம் கேட்டு தூக்கம் கலைந்து எழுந்தேன்.

நான் அந்த இரண்டு குழந்தைகளை நினைத்து மகிழ்வதா? இல்லை நம் குழந்தையை நினைத்து அழுவதா? என்றான்..

செல்வந்தருக்கும், கயல்விழிக்கும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

அப்போது செல்வந்தர் எல்லாம் ஒரு கனவாக நினைத்து நாம் வாழத்தொடங்குவோம் என்றார்.

வழக்கம் போல் ஆபிசுக்கு சென்று விட்டார் ஞானி... எனினும் அவன் மனதில் தாம் வளர்த்த பிஞ்சுக் குழந்தை இறந்ததை எண்ணி மனம் கலங்கினான். ‘கல்லான இதயமும் கலைவார் என்பார். அதுபோல் தம் மனம் மிகவும் வேதனைப்பட்டு அனலில் இட்ட புழு போல துடிதுடித்துப் போனது. பல சுமையுடன் ஆபீசுக்குச் சென்றார் ஞானி...

**மு.சதீஸ்குமார்**
**தமிழ்-ஆய்வியல் நிறைஞர்**

## முதல் கவிதை

கவிதை எழுத முயற்சித்தேன்
பல வார்த்தைகள் கிடைத்தும்
மனதில் ஒரு தயக்கம்..
எதைப்பற்றி எழுதுவது..?
நட்பு,காதல்,இயற்கை என மாறி
மாமறி
மனம் குழம்பிக் கொண்டிருக்க
பேனா மையில் ஈரம் காய்ந்து
வார்த்தை வரவில்லை..
சில நேர நிசப்தம்
இறுதியில்
என் கை
எதையோ எழுதத் தொடங்கியது..
பின்னர்ப் பார்த்தேன்
கண்களில் ஈரம்
தொடங்கினேன்..
அம்மா என்று…!

**எஸ்.சந்திரசேகர்**
கணினிப் பயன்பாட்டியல் துறை இ பிரிவு
இளங்கலை முதலாண்டு

**எழுத்தாணி – 1**

## பொறுப்பாக இரு..!

பண்டைக் காலத்தில் மன்னனுக்குப் புலவர்கள் அறிவுரை கூறுவது வழக்கம். மன்னர்களும் புலவர்கள் வாக்கினை பொன்போல் போற்றுவது வழக்கம். இதனைச் செவியறிவுறூஉ என்னும் சொல்லால் முன்னோர்கள் குறித்து வந்தனர். அதாவது

மன்னனின் செவியில் அறம் சார்ந்த கருத்துகளைப் புலவர்கள் அறிவுறுத்துதலால் இதற்கு இப்பெயர். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பர். மன்னனை மையமிட்டே மக்களின் வாழ்வியல் அமைந்திருந்தது. காதலும் போரும் பண்டைய மரபு. இவற்றுள் காதல் இல்லறம் சார்ந்தது. போர் நாட்டுப்பற்றுச் சார்ந்தது. போருக்குச்செல்லுதல், உயிர்த்தியாகம் செய்தல் என்பது பண்டைத் தமிழனின் முக்கியக் கடமைகள். எத்தனையோ வாள்களுக்கு முத்தமிட்டு வீரமரணம் அடைந்த வரலாற்றை நம் இலக்கியங்கள் பறைசாற்றி நிற்கின்றன. இந்த வீரமரணங்கள் அத்தனையும் நாட்டை ஆளுகின்ற மன்னனுக்காக என்பதை நினைக்கும் பொழுது மன்னன் எந்த அளவிற்கு மதிக்கப் பெற்றிருக்க வேண்டும்? மதிப்புள்ளவனாக இருந்திருக்க வேண்டும்? வீரமும் விவேகமும் ஒருங்கே பெற்ற மன்னனால் தான் இத்தகைய செல்வாக்கைப் பெற முடியும். இதற்குப் புலவர்களின் அறிவுரைகள் பெரிதும் துணைநின்றுள்ளன என்பதுதான் பெரும்பாலான மன்னர்களின் ஆட்சிப் பின்புலம்.. சரி,புலவர்கள் அப்படி என்னதான் செய்தார்கள்? மனதார வாழ்த்தி வாயார உண்டு சென்ற புலவர்களும் உண்டு. வேந்தனின் அருகில் இருந்து அறிவுரை கூறிய புலவர்களும் உண்டு. இவ்விரண்டையும் செய்கின்ற புலவர்களும் உண்டு. இவ்வாறு வாழ்த்தியும் அறிவுரை கூறியும் சென்ற புலவரின் பாடல்தான் கீழே உள்ளது.

எருமை அன்ன கருங்கல் இடைதோறு
ஆனின் பரக்கும் யானைய,முன்பின்
கானக நாடனை நீயோ பெரும
ஓர் ஆகலின் நின் ஒன்று மொழிவல்
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்வரின் ஓம்புமதிஅளிதோ
தானே அது பெறல் அருங்குரைத்தே
(புறநானூறு-5)

## புதுக்கவி வடிவாக

எருமை நிறத்**தில்**
கருமை மிகுந்த கற்கள்
நிலம் முழுதும் பரவிக் கிடக்கின்ற
அற்புதம்..
அவ்விடத்தில்
பசுக்கள் கூட்டம் கூட்டமாக
அலைந்து திரிவதைப் போன்று
யானைக் கூட்டங்கள்
ஏராளம் ஏராளம்..
இப்படிப்பட்ட
வலிமை மிக்க காட்டிற்குச்
சொந்தக்காரன் நீ..
பெருமை மிக்க பெரியோன் நீ..
உனக்கு ஒன்று உரைக்கின்றேன்

கேட்பாயாக..!
அருளும் அன்பும் இல்லாமல்
துன்பத்தோடு கட்டிப்புரண்டு
வாழும் மக்களுடன்
நட்பு கொண்டு விடாதே..!
பிள்ளையைக் காக்கும்
தாயைப் போல
நாட்டை நீ காக்க வேண்டும்
ஏனென்றால்
நாட்டைக் காக்கும் பொறுப்பு
எல்லோருக்கும் கிடைத்திடாது
முறையாகப் பயன்படுத்துவாயாக..
சுட்டிக் காண்பிக்க புலவனும்
அதன்படி
நாட்டைக் கட்டிக் காக்கும்
மன்னனும் இருந்த மண்தான்
தமிழர் மண்...!

**உரையாக**

எருமை போன்று கருப்பு நிறக்கற்கள் உள்ள இடமெல்லாம் யானைகள் அனைத்தும் பசுக்கூட்டம் போன்று மிகுதியாக உலவும். அத்தகைய வலிமையான காட்டையுடைய மன்னனே! பெருமை மிகுந்தவன் நீ என்பதால் உமக்கு ஒன்று உரைக்கின்றேன். அருளும் அன்பும் இல்லாமல் அவற்றை அறவே நீக்கிவிட்டு என்றும் நீங்காத துயரத்தில் இருப்பவரோடு இணைந்துவிடாமல் ஒரு தாய் தனது குழந்தையை எப்படி கண்ணும் கருத்துமாக வளர்ப்பாளோ அதுபோல் நீ உன் நாட்டைப் பாதுகாப்பாயாக! அரசு என்பது அனைத்தையும் அளிக்கக்கூடிய ஒன்று. அவ்வளவு எளிதாக யாருக்கும் கிடைத்திடாது. முறையாகப் பயன்படுத்திக் கொள்வாயாக என்பது பொருள்.

கீறல் தொடரும்...

**அகரன்-தமிழ்த்துறை**

**ஜென் தத்துவம்**

## கோபத்தை அடக்குவது எப்படி?

ஜென் குரு பங்கேயின் மாணவன் ஒருமுறை அவரிடம் வந்து 'மாஸ்டர் எனக்கு அடக்க முடியாத கோபம் வருகிறது. இதை எப்படி குணப்படுத்துவது?' என்று கேட்டான். அப்படியெனில் ஏதோ ஒன்று உன்னைப் பயங்கரமாக ஆட்டி வைக்கிறது. சரி, இப்பொழுது அந்த அடக்க முடியாத கோபத்தைக் காட்டு என்று குரு சொன்னார். அதற்கு மாணவன் அதை இப்பொழுதெல்லாம் காட்ட முடியாது என்றான். வேறு எப்பொழுது காட்ட முடியும் என்று குருவும் கேட்டார். அதற்கு அவன் 'அது எதிர்பாராத நேரத்தில்தான் வருகிறது' என்றான். அப்போது குரு அப்படியென்றால் அது உன்னுடைய சொந்த

இயல்பாக இருக்க முடியாது. அவ்வாறு உனக்குச் சொந்தமானதாக இருந்தால் நீ எந்த நேரத்திலும் எனக்கு அதைக் காண்பித்திருப்பாய். நீ பிறக்கும் போது அதைக் கொண்டு வரவில்லை, உன் பெற்றோரும் உனக்கு அதைக் கொடுக்கவில்லை. அப்படியிருக்க உனக்குச் சொந்தமில்லாத ஒன்றை ஏன் உன்னுள் வைத்துள்ளாய் என்று யோசித்துப் பார். பின் உனக்கே புரியும் என்று மாணவனை அனுப்பி வைத்தார்..

-மகா

## கல்லூரியின் கடைசி நாள்..

உடனிருந்த பொழுது
வார்த்தைகள் ஊமையானது
இதழ்கள் மௌனித்தது
கண்கள் விழி தாழ்த்தியது
எதிரே நின்றாலும்
முகம் பார்த்ததில்லை
புன்னகை சிந்தியதில்லை
நலம் விசாரித்ததில்லை
ஏன்…?
தெரியவும் இல்லை
புரியவும் இல்லை
ஆனால்
இன்றுடன் இவற்றுக்கெல்லாம்
முற்றுப்புள்ளி என்பது போல்
வந்தது பிரிவு..
துடைக்க கை இருந்தும்
துடைக்கவில்லை கண்ணீரை
வழியட்டும்
படித்த காலத்திற்கு
என் கண்ணீரே சாட்சி..!

**து.தினேஷ்**
**துகிலியல் ஆடைவடிவமைப்புத்துறை**
**இளங்கலை மூன்றாமாண்டு**

## நட்பு

மழைத்துளி மண்ணில் விழுந்தால்
சிதறிச் செல்லும்..
நம் நட்பு உயிர் உள்ளவரை
நிலைத்துச் செல்லும்
உறவுகள் எங்கும் நம்முடன்
வருவதில்லை..
எல்லா இடத்திலும் வரும்
ஓர் உறவு
நம் நட்பு மட்டுமே…!

**கே.ரம்யகிருஷ்ணன்**
**துகிலியல் ஆடைவடிவமைப்புத் துறை**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## நட்பு

குழந்தை என்ற விதையாய் இருந்து
பள்ளி என்ற நிலத்தில் விதைத்து
தேர்வு எனும் தண்ணீர் ஊற்றி
மனிதன் என்னும் மரமாய் வளர்ந்து
கல்லூரி எனும்
தோப்பில் இருக்கிறாய்
காதல் என்ற காய்க்கு ஆசைப்பட்டு
நட்பு எனும்
பழத்தை இழந்து விடாதே..!

**ஆர்.தமிழ்ச்செல்வி**
**துகிலியல் ஆடைவடிவமைப்புத் துறை**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## அழகிய தருணங்கள்

*சாரல் மழையில் நனைந்த காற்று*
*தென்றலாய்ச் சில்லிடுகிறது*
*மழைநீர் கொட்டும் சத்தம்*
*புதியதொரு இசையமைக்கிறது*
*மலர்களெல்லாம் நீரில் நனைத்து*
*தலையாட்டிப் புன்னகைக்கிறது..*
*எல்லோர் மனதும்*
*மழையில் நனையவே*
*மன்றாடிக் கெஞ்சுகிறது..*
*பல மைல் தூரம் கடந்து வரும்*
*இந்த நீர்த்துளிகள்*
*தேவனின்*
*தீர்த்தமாகவும் இருக்கலாம்..*

**எஸ்.ஜெஸிமா**
**துகிலியல் ஆடைவடிவமைப்புத்துறை**
**இளங்கலை முதலாமாண்டு**

## அனுபவங்கள்

*தடம் மாறிய பயணங்கள் கூட*
*புதிய அனுபவங்களைத் தரும்போது*
*தினசரி வாழ்க்கையில்*
*ஏன் சலிப்பிற்கும்*
*அலுப்பிற்கும் இடம் தர வேண்டும்*
*திசையின்றி வீசும்*
*தென்றலை ரசிப்பது போல*
*தினங்களை ரசித்திடுங்கள்*

**பிரசாந்த்**
**துகிலியல் ஆடைவடிவமைப்புத்துறை**
**இளங்கலை முதலாமாண்டு**

## வாழ்க்கை

*மனதில் தோன்றும் எல்லா*
*எண்ணங்களுக்கும்*
*உருவம் கிடைத்துவிட்டால்*
*வாழ்க்கைப் பயணத்தில்*
*சுவாரசியம் இருக்காது..*
*மனிதனுக்குரிய நம்பிக்கையெல்லாம்*
*இதுவும் கடந்து போகும் என்பதே..*
*வாழ்வின் நேரத்தையும்*
*தன் வசமாக்கினால்*
*எல்லா நாளும் இனிய நாளே…*

**என்.நர்மதா**
**துகிலியல் ஆடைவடிவமைப்புத் துறை**
**இளங்கலை இரண்டாமாண்டு**

## இந்தியாவில் ஆங்கிலக் கல்வி

*இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த போது பல கவர்னர் ஜெனரல்கள் நாட்டை ஆண்டு வந்தனர்.அவர்களில் ஒருவர் வில்லியம் பெண்டிங். இவர் கி.பி.1828 இலிருந்து 1831 வரை பதவியில் இருந்தார். அப்போது*

*அவர் பல துறைகளிலும் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். ஆங்கிலேயர்கள் தொடர்ந்து நடத்திய பல போர்களால் கஜானா காலியான போது பெண்டிங் அதை ஈடுகட்ட சிக்கணத்தைக் கடைபிடித்தார். அதில் ஆட்குறைப்பு வருவாயை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார்.இராணுவ வீரர்களுக்குக் கொடுக்கும் படித்தொகையைப் பாதியாகக் குறைத்தார். நில ஆக்கிர மிப்பாளர்களிடம் இருந்த நிலங்களை இழக்கச் செய்தார். வடமேற்கு மாகாணங்களில் சுமார் 30 ஆண்டுகளுக்கான வரியைச் செலுத்த வைத்தார். ஆங்கில அதிகாரிகளுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டியிருந்ததால் அந்தப் பதவிகளில் குறைந்த சம்பளத்தில் இந்தியர்களை வேலைக்கு அமர்த்தினார். இதனால் கஜானா நிரம்பி வழிந்தது.*

*நீர்த்துறையில் இந்தியர்களை அமர்த்தி அவர்களுக்கு அதிக அதிகாரத்தை வழங்கினார். அதுவரை நீதிமன்ற மொழியாக இருந்த பாரசீக மொழியை அகற்றி இந்திய மொழிகளை அதன் அந்தஸ்துக்கு உயர்த்தினார்.*

*இந்துக்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி சதி எனும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை 1829இல் தடை செய்தார். ராஜபுதனம், பஞ்சாப், மாளவம்,கட்ச் போன்ற பகுதிகளில் நிலவி வந்த பெண் குழந்தைகளைக் கொல்லும் செயலைத் தடுத்தார். சென்னை மாகாணத்தில் சில பழங்குடி இன மக்கள் மனித உயிர்களைப் பலியிடும் பழக்கங்களைக் கொண்டிருந்தனர்.அதை முற்றிலுமாக ஒழித்தார். இவர் காலத்தில் வழிப்பறி கொள்ளையர்கள் கூட்டம் கூட்டமாக வந்த பயணிகளிடம் கொள்ளையடித்துச் சென்றனர். அவர்களை முற்றிலுமாக அழித்து மக்கள் மனதில் நிம்மதியை ஏற்படுத்தினார். இவ்வாறு அனைத்துத் தீயப்பழக்கங்களையும் சீர்படுத்தினார். இந்தியர்கள் மீது ஆங்கிலக் கல்வி முறையை இவர் தான் புகுத்தினார். இந்தியர்களின் பழக்க வழக்கங்களை இது தலைகீழாக மாற்றிவிடும் என்று அவர் கூறினார். அது அப்படியே பழித்தது. தலைக்குடுமிகள் காணாமல் போயின. கிராப்தலை, பேண்ட் போன்றவையும் ஆங்கில*

நாகரிகமோகமும்இளைஞர்களைஆட்கொண்டன. இதனால் இந்தியா முழுவதும் ஒரு பொது மொழியாக ஆங்கிலம் உருவானதால் மறைமுக நன்மையும் இந்தியாவிற்கு ஏற்பட்டது. அது அடிமைப்படுத்த வந்த ஆங்கில மொழியே இந்தியா முழுவதும் ஒன்றிணைந்து சுதந்திர கனலை மூட்டும் மொழியாக மாறியது. இதனால் இந்திய தேசிய உணர்வுக்கும் நாட்டுப் பற்றுக்கும் வித்திட்டது ஆங்கில மொழி. வில்லியம்பெண்டிங் பிரபுதான் முதன் முதலில் கொல்கத்தா,டெல்லி,மும்பை, ஆக்ரா இடையே நெடுஞ்சாலையை அமைத்தார். நமது நாட்டைச் சீர்படுத்திய ஜெனரல்களில் இவர் முக்கியமானவர்.

**சிபியா**

துகிலியல் ஆடைவடிவமைப்புத் துறை

இளங்கலை முதலாமாண்டு

## நட்பு

காலம் நேரம் வந்து போயின
நீ வரும் வருகை எதிர்பார்த்து
விட்டுக் கொடுத்துச்
சென்ற காலங்கள்
என் மனதோரம்
தொட்டுவிட்டுச் சென்றது..
வெட்டி கட்டி நமக்குள்
உண்மையான நட்பு வலிமை
கொஞ்சம் அதிகம் தான்..
நட்புக்குக் காரணம் கேட்டால்
சொல்லக் கூடுமோ..?
காரணமே நட்புதான்..
நம் நட்பை நினைத்ததாலோ
என்னவோ கண்கள் ஈரமாயின..
ஈரம் செய்த காயமே!
தூரம் சென்று போகாதே!
காயமும் ஈரமும் என்றுமே வேண்டும்
நட்பே வாராயோ..
ஈரமே வாராயோ..?

**என். தனுசியா**

துகிலியல் ஆடைவடிவமைப்புத்துறை

இளங்கலை இரண்டாமாண்டு

## சமத்துவம்

ஆண்டுக்கொரு முறை
பிறந்தநாள் கொண்டாடுகிறார்கள்
நானோ தினமும் கொண்டாடுகிறேன்
நீ வேறு நான் வேறு
எனப் பிரித்துப் பார்க்க மனமில்லை
ஒற்றைக் கோட்டில் பயணிக்கும்
ஒரு புள்ளி நாம்...

**கே.உஷாராணி**

துகிலியல் ஆடைவடிவமைப்புத்துறை

இளங்கலை இரண்டாமாண்டு

## நட்பு

முதல் முறை மேடையேறி
ஆடியோ பாடியோ
பேசியோ வருபவனுக்கு

*நட்புதான் முதல் விருது*

*கலக்கிட்ட மாப்ள..*

**கே.உஷாராணி**

**துகிலியல் ஆடைவடிவமைப்புத் துறை**

**இளங்கலை இரண்டாமாண்டு**

***கட்டுரை-2***

## ***ஆடை வடிவமைப்புத் துறையில் சாதனை படைத்தவர்***

*இக்கட்டுரையினைத் தொடங்கும் முன் நான் என் பட்டப்படிப்புக்காகத் துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறையினைத் தேர்வு செய்ததற்காக மிகவும் பெருமிதம் கொள்கிறேன் ஏனெனில் ஒரு மனிதனின் முக்கியத் தேவைகள் மூன்று. அவை வயிற்றுக்குச் சோறு, வசிக்க இருப்பிடம், உடுத்த உடை. ஒரு மனிதனின் மூன்றாவது தேவையினைப் பூர்த்திச் செய்யும் செயல் என்னால் முடியும் என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.*

*ஆடை வடிவமைப்புத் துறையில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. இத்துறையில் பெண்கள் பலர் சாதனை படைத்துள்ளனர். அதில் சிலர் ரித்து பேரி,ரித்து குமார். இவர்களைப் போன்று ஏராளமானோர் பெரும் புள்ளிகளாகத் திகழ்கின்றனர். ரித்து பேரியின் வாழ்க்கைச் சாதனையைப் பற்றிச் சில செய்திகளைக் காணலாம்*

***ரித்து பேரி***

*ரித்து பேரி என்பவர் மிகவும் புகழ்பெற்ற இந்திய ஆடை வடிவமைப்பாளர்.இவர் உருவாக்கிய ஆடையினை அறிமுகப்படுத்தப் பல முறை நவநாகரிக (fashion show) ஆடை அலங்கார அணிவகுப்பினை இந்தியாவில் நடைபெறச்செய்து பல பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் பெற்றுள்ளார்.*

***படிப்பு*** *– புதுதில்லியில் ஆடை வடிவமைப்புத் துறை*

***வளர்ச்சி***

*படிப்பினை நிறைவு செய்த பிறகு தனக்கும் தன் நண்பர்களுக்கும் ஆடைகளைவடிவமைத்து முன்னேற்றம் கண்டார். பின்னர் 1990 இல் லாவன்யா என்ற பெயரில் ஒரு ஆடை வடிவமைப்பு நிறுவனத்தைத் தொடங்கினார் சேன்ஸ்கிரீட்டி என்ற பெயரில் 1995 ஆம் ஆண்டு ஒரு நிறுவனம் நிறுவி நல்ல முறையில் நடத்தி வந்தார்.*

***பட்டம்***

*இவர் மகில்லா சிரோமணி என்னும் பட்டத்தினைப் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற*

பெருமையினைப் பெற்றுள்ளார். பத்திரிகைகள் மூலம் உலகம் முழுவதும் தெரியப்படும் ஒரு புகழ்பெற்ற பெண்மணியாகவும் தொழில் முன்னேற்றம் கண்டவர்.

**சாதனை**

ரித்துபேரி ஆசிய கண்டத்தின் ஆடை வடிவமைப்புத் துறையில் முதல் பெண்மணி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார். இவர் 17 நவநாகரிக ஆடை அலங்கார அணிவகுப்பில் பங்குபெற்றுள்ளார்.பெய்ஜிங், நியூயார்க், வாசிங்டன் போன்ற இடங்களில் இவர் வடிவமைத்தஆடை அரங்கேற்றப்பட்டு மிகவும் புகழ்பெற்றுள்ளது. உலகம் எங்கும் பரவியிருக்கிறது.

**முடிவுரை**

ரித்துபேரியின்செயல்களும்படைப்புகளும் எண்ணில் அடங்காதது. இவரின் படைப்புகள் இந்தியாவில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தன.

**கே.நிவேதா**

துகிலியல் ஆடைவடிவமைப்புத் துறை

இளங்கலை இரண்டாமாண்டு

## பொம்மை

வாங்கிச் செல்லும்
பொம்மையைக் கண்டதும்
குழந்தை சிரிக்கின்றது..
தன் தந்தையின் முகத்தில்
முத்த மழை பொழிகின்றது..
ஆனால்
அந்தப் பொம்மைக்குத்தான் தெரியும்
தன்னை
உருவாக்கியவனின் குழந்தை
பசியால் துடிக்கிறதென்று...!

**பா.பாஸ்கி**

இளங்கலை முதலாண்டு

கணினிப் பயன்பாட்டியல் துறை

**அறநெறிச்சாரல் - 2**

## வல்லவனுக்கும் வல்லவன்

நாட்டில் ஏமாற்றுபவர்கள் எண்ணற்றவர்கள் இருக்கிறார்கள். இருக்கின்றனர். அவர்களிடம் பறிகொடுத்தவர்கள் தம் மூடத்தனத்தை நினைத்து எண்ணி ஏங்கி உளநோய்க்கு ஆளாவர். தம் வாழ்க்கையே முடிந்து போய்விட்டதாகக் கருதுவர். அவர்கள்,அதாவது ஏமாந்தவர்கள் முட்டாள்களாக ஏமாந்தவர்களாக ஊரார் எண்ணி நகையாடப்படுவர். இதுவே இன்று நாட்டில் நிலவும் சூழ்நிலை.ஆனால் ஏமாற்றத் தெரியாதவன் கூட முட்டாள் என்று கூறுபவரும் உண்டு. ஏனென்றால் அடுத்தவன் பொருளை எவ்வாறு அபகரிப்பது, வழிப்பறி செய்வது, கைப்பற்றுவது என்று தெரியாதவன்

*முட்டாள் தானே.. அவனை அவ்வாறு தானே அழைக்க இயலும்..*

*ஓர் நாட்டில் கோகுலராமன் என்ற ஒரு ராஜா இருந்தார். அவர் நல்லாட்சி புரிந்து வந்தார். அனைத்து மக்களுக்கும் வேண்டியதைச் செய்து வந்தார்.. அவர் ஆட்சியின் கீழ் மக்களும் மகிழ்ச்சியாகவே வாழ்ந்து வந்தனர்.. தன் அரண்மனையில் இருக்கக்கூடிய அனைத்துப் புலவர்களுமே தலைசிறந்து கவிபாடக் கூடிய அறிவாளிகளாக இருந்தனர். தன் அமைச்சர்களும் அவ்வாறே அறிவில் சிறந்து விளங்கினர். ஒருநாள் தன் அரண்மனைக்கு ஒரு முத்து வியாபாரி வந்தான். அவனிடம் மன்னன் கொஞ்சம் முத்துக்களை வாங்கினார். பின் அவன் கொடுத்த முத்துக்கள் சிறந்தவைகளாக இருப்பதைக் கண்டு மேலும் முத்துக்களைக் கேட்டான்..*

*அவ்வணிகன் தனது நாட்டிலிருந்து தருவித்துத் தருவதாகக் கூறினான். அதனைக் கேட்ட மன்னன் அவனிடம் பல இலட்சக்கணக்கான பணத்தைக் கொடுத்து அடுத்த முறை வருகின்றபொழுது நிறைய முத்துக்களைக் கொண்டு வருமாறு மன்னர் கூறினார். அவனும் மனம் மகிழ்ந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றான்..*

*இதற்கிடையில் அமைச்சரவை கூடியது. ஒரு ஏழை விவசாயியை ஒரு நயவஞ்சகன் ஏமாற்றிவிட்டதாக வழக்கு வந்தது. தன்னிடம் இருந்த பொருளை நயவஞ்சகமாக ஏமாற்றிவிட்டான் என்று அந்த விவசாயி குற்றம் கூறினான். விவசாயியிடம் பணம் திருப்பித் தரப்பட்டது. ஒரு வழியாக வழக்குத் தீர்க்கப்பட்டது..*

*அதாவது ஏமாற்றியவன் தனக்கு வறுமை தாங்க முடியவில்லை. அதனால் இவரிடம் ஏமாற்ற வேண்டிய சூழ்நிலை என்று தன்னை மறந்து கண்ணீர் விட்டான்...*

*மன்னனும் ஏற்றுக்கொண்டு அந்த ஏழை விவசாயிக்குப் பணம் கொடுத்து உதவினான்.. அனைவரும் ஒன்றாகக் கூடியிருக்கும் அந்த அரசவையில் ஓர் அமைச்சர் வரவர நமது நாட்டில் ஏமாற்றுக்கொள்கை அதிகமாகிவிட்டது மன்னா என்றார். அனைவரும் ஆமாம் நிறையதிருட்டு, கொள்ளை, ஏமாற்றுவேலைகள் பெருகி விட்டது என்றனர்..*

*சரி இதற்கு ஒரு வழிகாணுவோம் என்று கூறிய மன்னன் நாட்டில்*

ஏமாறும் முட்டாள்கள் எத்தனை பேர் உள்ளனர் என்று கணக்கெடுத்து வாருங்கள் என்றார். அமைச்சர் அடுத்த நாள் காலையில் அரசபை கூடிய பின் தன் கையில் மிகப்பெரிய ஒரு பெயர்ப்பட்டியலை வைத்திருந்தார். அதனை மன்னனிடம் படித்துப் பார்க்க அனுமதி கேட்டான்.. மன்னனும் அனுமதி வழங்கினான்..

அனைவரும் ஏமாறுபவர்களின் பட்டியலில் யார் முதல் இடத்தைப் பிடித்திருப்பர் என்று தெரிந்து கொள்ள ஆவலோடு இருந்தனர். அமைச்சன் அரசன் பெயரை முதலில் வாசித்தான்.. உடனே அனைவரும் அதிர்ச்சியாகி விட்டனர்..

இதென்ன..? முட்டாள்களின் பெயர்களில் அரசன் பெயரை முதலில் சேர்த்துள்ளனர் என்று அனைவரும் வியப்பு, ஆச்சரியம், அதிர்ச்சியுற்றனர். அமைச்சனிடம் அரசன் கேட்டான் ஏன் எனது பெயரை முதலில் சேர்த்தாய்..? ஆம் அரசே! ஒருநாள் நமது அரண்மனைக்கு வியாபாரி ஒருவர் வந்தார். அவர் நம் யாருக்கும் முன்பின் அறியாத நபர். ஆனால் அவனிடம் நீங்கள் முத்துக்களை வாங்கியதோடு மேலும் பணம் கொடுத்து அனுப்புனீங்க.. அவன் ஒருவேளை பணத்தைப் பெற்றுக்கொண்டு ஓடிவிட்டால் என்ன செய்வது? அதனால் முட்டாள்களின் பட்டியலில் முதலில் உங்கள் பெயரைச் சேர்த்தேன்…

ஒருவேளை அந்த வியாபாரி முத்துக்களைக் கொண்டு வந்து கொடுத்தால் என்ன செய்வாய்? என்று அரசன் கேட்டான். அதற்கு அமைச்சர் அவன் பெயரை முட்டாள்களின் பெயர்ப்பட்டியலில் முதலில் சேர்த்து விடுவேன் என்று கூறினான்..

அந்த நேரத்தில் முத்துவியாபாரி முத்துக்களுடன் அரண்மனை வாயிலில் நின்று கொண்டு அரசே! நான் முத்துக்களைக் கொண்டு வந்துள்ளேன் என்றான். நேர்மையான புத்திசாலியான கோகுலராமன் மன்னன் சில நேரங்களில் ஏமாற்றுக் கொள்கைக்கு ஆறுதல் வெற்றி தானே தவிர என்றும் நிரந்தர வெற்றியில்லை எனதாட்சியில் என்றுஅமைச்சனுக்குப்பதிலடிகொடுத் தான். பிறகுதான் தெரிந்தது அந்த முத்து வியாபாரி யாருக்கும் தெரியாமல் மன்னனால் அனுப்பப்பட்ட ஒற்றன் என்பது…

**இராம.தேவணன்**
தமிழ்-உதவிப் பேராசிரியர்

## அன்பு

நான் சந்தோசத்தைச்
சந்திக்கும் போதெல்லாம்
உன்னைத்தான் தேடுகிறேன்
பகிர்ந்துகொள்ள..
நான் துக்கத்தைச்
சுவாசிக்கும் போதெல்லாம்
உன் மடி தேடுகிறேன்
என் முகம் புதைக்க..
நான் இருட்டில் தவிக்கும் போது
விளக்கை ஏந்தி
வெளிச்சமூட்டுகிறாய்
நான் வெளிச்சத்தில் இருக்கும் போது
என் கண்ணில் ஒளியாகிறாய்..
மலரால் வாழ்த்தவியலாது
மனதால் ஆராதிக்கிறேன்
என் பெற்றோரை..

**ச.ஸ்ரீமீனாட்சி**
இளங்கலை வேதியியல் முதலாமாண்டு

## இரவின் மடியில்

இரவின் தாய் மடியில் விழிகள் மூட
மனம் அனுமதிப்பதில்லை..
மனத்தின் நினைவுகளை
விழிகள் சுமப்பதால்
விளக்கம் வருவதில்லை..
மனதில் தோன்றும் நினைவுகள்
விழி முன் வந்துசென்று
வேதனைகளைத் தினந்தரும்
இரவின் விழிமுன் பல
கனவுகள் இருந்தும் அவைகள்
நிஜமாக மனம் ஏங்குகின்றது...
அப்படியே
கழிகின்றன ஒவ்வொரு இரவும்..

**எஸ்.மஞ்சுபார்கவி**
இளங்கலை கணினிஅறிவியல்
இரண்டாமாண்டு அ பிரிவு

## மெழுகுவர்த்தி

உதிர்ந்துகொண்டே
பூத்துக் கொண்டிருக்கும்
அழுதுகொண்டே
சிரிக்கின்ற அதிசயப் பிறவி..
நாம் ஆன்மாவை அழித்து
உடம்பைக் காப்பாற்றுகிறோம்..
மெழுகுவர்த்தியோ
உடம்பை அழித்து
ஓர் உயிரைக் காப்பாற்றுகிறது...

**ஹரிஹரன்**
இளங்கலை கணினிஅறிவியல்
இரண்டாமாண்டு அ பிரிவு

## வெற்றி யாருக்கு

வெற்றி இலக்கை அடைய
முனைப்பும்
ஆர்வமும் மன உறுதியும்
செறிவாக இருக்க வேண்டும்
இலக்கை ஒரு தாளில் எழுது

செயல்படு..
உயிர்வாழ ஆக்ஸிஜன் எவ்வளவு முக்கியமோ
அவ்வளவு முக்கியம் இலக்கும்..
முயற்சியின்றி முன்னேறிய
மனிதர்கள் யாருமில்லை..
உள்ளுவதெல்லாம்
உயர்வுள்ளல் எனும்
வள்ளுவன் வாக்கு
நினைவில் எழுகிறதா..?
திட்டமிட்ட கடின உழைப்பு
செயலில் உறுதி..
விடாமுயற்சி..
எதையும் தாங்கும் இதயம்
எல்லாவற்றிற்கும்
மேலாக தன்னம்பிக்கை
இவைதான் உங்களை
வெற்றிப் பாதைக்கு
அழைத்துச் செல்லும்…

**பா.பரிதா**
தமிழ்-ஆய்வியல் அறிஞர்

## பிச்சைக்கார பெருந்தகையின் பேரொலி

ஞாயிறு என்னை கொளுத்திவிட
வறுமை என்னை களைத்துவிட
வயிற்றுப் பசியால் பிழித்துவிட
கருமை நரை தழைத்துவிட
பாதம் தளர்ந்து செயல்பட
வெறுத்த வாய் அசைவால்
உற்சாகமாக அழைக்கிறான்
ஒவ்வொரு நாளும்
அம்மா தாயே..!

**ஏ.ராஜலெட்சுமி**
உயிர்த்தொழில் நுட்பவியல் 'அ' பிரிவு
இளங்கலை முதலாமாண்டு

## விடியல்..

ஆண்டுகள் பல கடந்துவிட்டோம்
ஆயினும் அடிமைகளாவே
வாழ்ந்துவிட்டோம்..
பணக்காரன் முன்னேற
பாட்டாளி உழைக்கிறான்..
தன் குடும்பத்தையே
அடியோடு மறக்கிறான்..
எலும்பும் தோலுமாய்
எத்தனை காலம் உழைத்தான்..?
அவன் எசமானாக வாழ நினைத்தானா.?
நாடு விட்டு நாடு சென்று பாடுபடுகிறான்
தன் பாட்டையே எண்ணி
நாளும் வாடுகிறான்..
செருப்பு தைப்பவனோ
செருப்பு இல்லாமல் தேய்கிறான்..
வீடு கட்டுபவன்
வீடு இல்லாமல் அலைகிறான்..
பணமோ இருக்கும் இடத்தையே
தேடிப் போகிறது..
ஏழையின் இல்லத்தில்

இல்லாமையே இருக்கிறது..
இருப்பவன் நினைத்தால்
இதைத் தடுக்கலாம்..
இவன் நினைக்கவில்லை
ஏழையின் வாழ்வோ மாறவில்லை..
என்றாவது ஒரு விடியல்
ஏழைக்கு உதிக்கும்
இவன் வாழ்வும் மாறும்
உழைப்பவன்
என்றைக்கும் உயர்வான்..

**பெ.லோகநாதன்**
இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு

## மழை

அழகிய மாலைப் பொழுதில்
அனைத்து உயிர்களும் இருப்பிடம்
செல்லும் வேளையில்
வான் தேவதையே..!
நீ வருவாய் என காத்திருக்கும்
நீர் கோர்த்த மேகங்கள்..
ஏழு வண்ணங்களுடன் சேர்ந்திருக்கும்
வானவில்லான உன் சகோதரிகள்
நீ வருகை தந்ததும் ஆரவாரத்துடன்
இருக்கும் இடி மின்னல்கள்..
நீ வந்த மகிழ்ச்சியில்
தன்னை மறந்து நடனமாடும்
ஆண் மயில் கூட்டங்கள்..
சந்தோசத்தில் ஆர்ப்பரித்து
ஓடும் ஆறுகள்..
உற்சாகத்தில் துள்ளிக் குதிக்கும்
ஏரி,குளம்,குட்டைகள்..
ஏனென்றால்
உன் வருகை
இந்தப் பூமிக்குக் கிடைத்த
பொக்கிஷம் அல்லவா..?

**ச.பிரியவதனா**
கணினிப் பயன்பாட்டியல் துறை
இளங்கலை முதலாமாண்டு

## பசுமை வெறும் கனவே..!

கிளியின் கீச்சல்கள்
தேன் மணம் கமழும் மலர்கள்
மணத்தில் மயங்கும் வண்டுகள்
காணும் இடமெல்லாம்
பசுமை படர்ந்திருந்தது..
அமைதி காதினைப் பிளந்தது
சாதி மதம் யாவும் மறைந்தது
முகப்புத்தகம் கிழிந்தது
மனித மனம் மீண்டும் சிரித்துப்
பேசியது
ட்விட்டர் பறவை இறந்தது
காதுகளால் ரகசியங்கள்
பரப்பப்பட்டன மீண்டும்..
தொழிற்சாலைகள் சிலந்திகளின்
வீடுகளாயின..
கரி வாயுவைக் கக்கியவை யாவும்
இப்போது கரிபட்டுப் போயின..
பூமி மீண்டும் பூத்தது
இயற்கையின் ஒளி எங்கும்
ஒளிர்ந்தது
உலகில் சூழ்ந்த இருட்டு கரைந்தது
புது உலகம் பிறந்தது

வருத்தம் பெயர் தெரியாத
முகவரியானது..
நீதியும் நேர்மையும் நிலைத்தது
ஆற்றுநீரும்
அமுதமாயிருந்தது
நீர் நிலையங்கள் யாவும்
நிறைந்திருந்தது..
குதித்தேன் அதனுள் ஆசையுடன்
விழுந்தேன் படுக்கையிலிருந்து..
விழித்தேன் கனவிலிருந்து..
மெய்யில் பொய்யானவைதான்
ஏதோ
கனவிலாவது மெய்யானது..

**எஸ் சந்திரசேகரன்**
கணினிப் பயன்பாட்டியல் துறை
இளங்கலை முதலாமாண்டு

## நட்பு

நீயும் நானும்
வேறு வேறு வயிற்றில் பிறந்தாலும்
ஒன்றாய் சேர்ந்தோம்
ஒரு பள்ளிக்கூடத்தில்
நட்பு எனும் தோட்டத்தில்
ஒன்றிணைந்தோம்…
அந்த தோட்டத்திற்கு
அழகு சேர்த்து
அன்பு பாராட்டினோம்
நட்பு எனும் பூங்கொத்தால்..

**எஸ்.திவ்யா**
வணிகக் கணினிப் பயன்பாட்டியல் துறை
இளங்கலை முதலாமாண்டு

## ஆசை..

நான் இறந்த பிறகு
என் கண்களை வேறு ஒருவருக்குத்
தர விரும்புகிறேன்
அதை வைத்து அவர்கள்
உலக அதிசயங்களைப் பார்க்கலாம்
நான் இறந்த பிறகு
என் இதயத்தை
வேறு ஒருவருக்குக் கொடுத்து
விடுவேன்
அதன் மூலம் அவர்
உயிர் வாழட்டும்..
நான் இறந்த பிறகு
என் உடல் முழுவதையும்
தானம் செய்ய விரும்புகிறேன்
ஏதோ ஒரு பயன் பெறட்டும்..
ஆனால் என் கால்களை மட்டும்
யாரும் கேட்டுவிடாதீர்கள்
ஏனெனில்
என் கடைசி பயணத்திற்கு
நானே
நடந்து செல்ல விரும்புகிறேன்…

**எம்.ஐஸ்வர்யா**
துகிலியல்மற்றும்ஆடைவடிவமைப்புத்துறை
இளங்கலை முதலாமாண்டு

## தாய்..!

கல்லில் செதுக்கிய கடவுளைக்
கும்பிடும் மனிதனுக்குக்
கருவில் சுமந்த
அன்னையை
அரவணைக்க நேரமில்லை..

மனிதா
கடவுள் இருப்பதும்
கருவறைதான்
மறந்து விடாதே..

**ஜி.வினிதா**

துகிலியல்மற்றும்ஆடைவடிவமைப்புத்துறை
இளங்கலை முதலாமாண்டு

## பொறாமை

புதிதாகப் பக்கத்து வீட்டில் குடி வந்துள்ள குடும்பத்தினரைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கவில்லை. அதிலும் அந்தக் குடும்பத்தைச் சார்ந்த என் வயதுள்ள கிஷோரைக் கண்டாலே பிடிப்பதில்லை. கோபம் கோபமாய் வருகிறது.. என்று அடுக்கடுக்காகத் தனது தாயிடம் கூறிக்கொண்டே சென்றான் சரவணன்.

அனைத்தையும் கேட்ட அவனது தாய், ஏன் உனக்கு இவ்வளவு கோபம் அவன் மீது என்றாள். அதற்கு அவனால் பதில் கூற முடியவில்லை. ஏனெனில் தன்னை விட அனைத்துச் செயல்களிலும் அவன் சிறப்பாக உள்ளதை சரவணனால் ஏற்றுக்கொள்ளவோ ஒப்புக்கொள்ளவோ இயலவில்லை.. எனவே அமைதியாக இருந்தான். சரவணனின் தாய், அவனை அமைதியடையச் செய்வதற்காகச் சமாதானம்கூறினாள். அனைவரிடமும் அன்பாக இருக்குமாறு கூறினாள்.. ஆனால் அவற்றைஏற்க சரவணனின் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. கோபத்தோடு வெளியேறிய அவன், வேகமாகத் தன் இரு சக்கர வாகனத்தை இயக்கினான்.

அப்பொழுது அவன் முன் கிஷோர் தோன்றினான். புன்னகை தவழும் முகத்தோடு கையில் ஒரு இனிப்புப் பெட்டியுடன் சரவணன், நாம் இருவரும் பங்கு கொண்ட போட்டியின் முடிவு இன்றுதான் என்பதை மறந்துவிட்டாயா.? என்றான்.

சரவணனின் முகம் கோபத்தில் சிவந்தது. தன்னைவிட கிஷோர் போட்டியில் முன்னிலையில் வந்து விட்டானோ, அதனால்தான் இனிப்பைத் தர வந்துள்ளனோ? எனச் சினம் கொண்டான். பின் கிஷோர் அவனை வற்புறுத்தி இனிப்பைக் கொடுத்தான்..

ஆனால் சரவணன் கொடுத்த இனிப்பை ஏற்க மறுத்தான். ஆனால் கிஷோர் அவனை வற்புறுத்தி இனிப்பைக் கொடுத்து தான் இரண்டாவது இடம் பெற்றதாகக் கூறினான். ஆனால் சரவணனால் அதை நம்ப முடியவில்லை. இவன் வேண்டுமென்றே என்னை வெறுப்பேற்றுகிறானோ என எண்ணினான். கிஷோரிடம் நீ இரண்டாம் இடம் பெற்றுள்ளாய்

என்றால் முதல் இடத்தைப் பிடித்தவர் யார்? என்றான். அவன் கள்ளமற்ற புன்னகையயோடு அது என் நண்பன். அவனது பெயர் சரவணன் எள்நு கூறினான். சரவணன் தன் செயலை எண்ணி வெட்கித் தலைகுனிந்தான். ஏனெனில் சரவணனுக்குத் தெரியும் கிஷோர் தன்னைவிட மிகவும் திறமை வாய்ந்தவன், மேலும் அவன் விட்டுக்கொடுக்காமல் இந்த முதல் இடம் தனக்கு வராது என்று சரவணன் புரிந்து கொண்டான். வெறுப்பை விட நட்பே பெரியது என்று. அந்த நிகழ்வுக்குப் பின்னும் அவர்களிடையே போட்டி இருந்தது. ஆனால் பொறாமை இல்லை. இருவரும் பிரிக்க முடியாத தோழர்கள் ஆனார்கள்.

**ப.மோகனா**
துகிலியல்மற்றும்ஆடைவடிவமைப்புத்துறை
இளங்கலை முதலாமாண்டு

## நட்பு

நான் முன்னேறுவதற்கு ஏணிப்படியாக
இருந்தாய்..
தோல்வியைத் தழுவும் போது
தோள் கொடுத்து நின்றாய்..
நிலை இல்லாத வாழ்க்கைக்கு
நிலையாக இருந்தாய்..
நம்மைப் பிரித்த எமனுக்கு
நீ எமனாய் இருக்க
ஏன் மறந்தாய்..?

**ரா.அரவிந்தன்**
துகிலியல்மற்றும்ஆடைவடிவமைப்புத்துறை
இளங்கலை முதலாமாண்டு

## சலவைத் தொழிலாளி

சட்டையின் சுருக்கத்தை
நீக்குகிறான்
தன் சுருங்கிய
வயிற்றுப் பசியை நீக்க முடியாமல்..

**பா.பாஸ்கி**
இளங்கலை முதலாண்டு
கணினிப் பயன்பாட்டியல் துறை

## நினைவு ஒன்று போதும்

வாழ்க்கை எனும் ஓடையில்
நீ படகானால்
செலுத்தும் துடுப்புகள்
உன் நண்பர்கள்..
தன்னலத்துடன் முன்னேறுபவர்
முன்னால்
தன்னலமற்ற நண்பர்கள்
இருப்பார்கள்..
காதல் கவிதை நடைமுறை
வாழ்ககைக்கு ஏற்றதல்ல
ஆனால் நட்புக் கவிதை
எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றது..
நண்பர்கள் அருகில் இருந்தாலும்
தொலைவில் இருந்தாலும்
நினைவு ஒன்று போதும்..

**பா.மைதிலி**
*துகிலியல்மற்றும்ஆடைவடிவமைப்புத்துறை*
*இளங்கலை முதலாமாண்டு*

## தோழி

*தோழியே மொட்டுகள் கூட*
*விரிந்துவிடும்*
*உன் பார்வை பட்டால்..*
*மரங்கள் கூட இசையமைக்கும்*
*உன் குரலைக் கேட்டால்..*
*வெயில் கூட குளிராகும்*
*உன்னுடன் நின்றால்..*
*கண்ணீர் கூட அமிர்தமாகும்*
*உன்னோடு கை குலுக்கினால்..*
*என் மனம் கூட சொர்க்கமாகும்*
*உன்னோடு சேர்ந்து நடந்தால்..*

**அ.ஜெனித்தா**
*இளங்கலை முதலாண்டு*
*கணினிப் பயன்பாட்டியல் துறை ஈ பிரிவு*

## கருவறை முதல் கல்லறை வரை...

*கருவறையில் இருக்கும் இருளையும்*
*கல்லறையில் இருக்கும் இருளையும்*
*பார்த்தவருண்டோ..?*
*இரண்டிற்கும் உரியவருக்குத் தான்*
*அவை தெரியும்..*
*அவற்றைக் காண*
*நீ மீண்டும் பிறக்கவும் முடியாது*
*மறுமுறை இறக்கவும் முடியாது...*

**எஸ்.திவ்யா**
*வணிகக் கணினிப் பயன்பாட்டியல் துறை*
*அ பிரிவு இளங்கலை முதலாமாண்டு*

## உயிர்

*அவசரமாகப் புறப்பட்டு*
*ஆபத்தில் சிக்கினேன் சாலையில்*
*அவசர உதவிக்கு*
*108 அழைக்கப்பட்டது..*
*108 ஐ விட விரைவாக*
*ஒரு வண்டி வந்தது*
*நட்பு எனும்*
*தோள் வண்டி....!*

**எஸ்.சந்திரசேகர்**
*கணினிப் பயன்பாட்டியல் துறை இ பிரிவு*
*இளங்கலை முதலாண்டு*

## பிரிவு

*அழகிய பூஞ்சோலை*
*அருகில் வெள்ளி முத்துக்களாக*
*ஆர்ப்பரிக்கும் அருவி..!*
*பளிச்சென்று ஒளிதரும் சூரியனின்*
*காலை உதயம்..!*
*புத்துயிர் பெற்று மகிழ்ச்சியாய்*
*இருக்கும் புல்வெளிகள்..*
*பார்க்கும் திசையெல்லாம்*
*பாடித்திரியும் பறவைக்கூட்டங்கள்*
*எங்கு பார்த்தாலும்*
*அனைத்து உயிர்களும்*
*மகிழ்ச்சியாய் உள்ளன..*
*ஆனால் நான் மட்டும்*
*நானாக இல்லை..*
*காரணம்*

*என் தோழியே*

*நீ என் அருகில் இல்லை…!*

***ச.பிரியவதனா***

*கணினிப் பயன்பாட்டியல் துறை*

*இளங்கலை முதலாமாண்டு*

## போராளி

*தமிழா எழுந்திடு*
*புயலாய் புறப்படு..*
*பாதைகள் முழுவதும் முட்களா..?*
*முயற்சி செய்..*
*முட்களில் கூட பூக்கள் பூக்கும்*
*சோம்பேறியாய் இருக்காதே*
*சோதனைக் கண்டு தளராதே..*
*வேதனையா வெட்கப்படாதே..*
*சாதனைதான் உன் மூச்சு..*
*சாதிக்கும் வரை வேண்டாம்*
*வெட்டிப் பேச்சு..*
*நிமிரந்து நில்*
*நிலைத்து இருப்பாய்..*
*துணிந்து வா*
*தோல்வியை வெல்வாய்..*
*கடமையைச் செய்*
*கவலையை மறப்பாய்..*
*எதற்கும் துணி*
*இமயம் தொடுவாய்..*
*அடி வாங்கினால் தான்*
*கற்கள் சிற்பமாகும்..*
*வலி தாங்கினால் தான்*
*மனிதா நீ மகுடம் சூடுவாய்..*

***பெ.லோகநாதன்***

*இளங்கலை வேதியியல் இரண்டாமாண்டு*

## சேர்வோம்

*எப்போதும் சிரிக்கும்*
*என் நண்பன்*
*முதல்முறையாக அழுகிறான்..*
*எழுந்து துடைக்க நினைக்கிறேன்*
*நான் இறந்து கிடக்கிறேன்*
*என்பதையும் மறந்து…!*

***டி.துளசி***

*துகிலியல்மற்றும்ஆடைவடிவமைப்புத்துறை*

*இளங்கலை முதலாமாண்டு*

## மறதியும் நட்பும்

*நதிக்கரையில்*
*இருக்கும் மணல்கள் கூட*
*நதியைத் தொட இயலவில்லை*
*என்று தினந்தோறும் ஏங்கும்..*
*பிரிந்து போன*
*நம் நட்பு*
*எப்போது சந்திப்போம் என*
*தினந்தோறும் ஏங்கும்..*
*மீண்டும் சேர்வோம்*
*என்ற நம்பிக்கையில்தான்*
*நாம் பிரிகின்றோம்…!*

***சி.தாரணி***

*வணிக மேலாண்மையியல் துறை*

*இளங்கலை மூன்றாமாண்டு அ பிரிவு*

## பரிசு தரவில்லையே

அட்டைகளும் வண்ணக் காகிதங்களும் பசைடப்பாவுடனும் கத்தரிக்கோலுடனும் கலந்து கிடந்தன. பல வண்ணங்கள் இணைந்து கிடந்ததில் தரையின் வண்ணங்கள் தெரியவில்லை.

அவனும் அவளும் நடத்திய பேச்சுகள் குழந்தைக்கும் தெரியாது. குழந்தையின் ஆசிரியைக்கும் தெரியாது. ஆனால் இன்னும் ஒருவாரத்திற்குள் முடித்து விடவேண்டும். அவனுக்கு இருப்பது இன்னும் இரண்டு நாட்கள் விடுப்பு மட்டுமே. இரண்டுநாளில் இதைச் செய்யமுடியாது. சரி மேலும் விடுப்பெடுப்பது என்ற முடிவுக்கு வந்தான் அவன். பணி முடிந்தவுடனே வீடு நோக்கி விரைந்து வந்தாள் அவள்.

காகிதங்களும் கத்தரிக்கோலும் கவனமாகப் பழகிக் கொண்டன. அவனின்கற்பனைகளும் அவள்தந்த கருத்துக்களும் அங்கே வடிவமாக உருவெடுத்தன.

என்னப்பா இது?. உனக்குத்தான்டா செல்லம். எதுக்குப்பா? உங்க பள்ளியில இலக்கியக் கண்காட்சி நடக்கப் போகுதுடா. அதுல நீ கலந்துக்கிடப்போறம்மா.. நானாப்பா? ஆமான்டா... என்னப்பா செய்யனும். எல்லோரும் வருவாங்க.. நீ இந்த அட்டைகளைக் கொண்டு அப்பா சொல்லிக் கொடுப்பது போல எல்லோருக்கும் சொல்லனும். ஐ...யா... ஜாலி.. ஜாலி....

பலமுறை மாற்றியமைக்கப்பட்டன அட்டைகள்.முடிவில் உருவெடுத்தது. உயிர் எழுத்துகளை உற்பத்தி செய்யும் மாமரம். மஞ்சள் நிறத்தில் அடிமரம். பச்சை நிற அட்டைகள் கிளைகளாகக் கிளைத்தன. அவற்றுள் இளஞ்சிவப்பில் பளீரென்று மின்னித் தொங்கின உயிர் எழுத்துகள் மாங்கனிகள். குறிலும் நெடிலும் வரிசையாக அமைக்கப்பட்டன. ஐகாரமும் ஔகாரமும் தனித்தே தொங்கின. குழந்தைக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சியில் உயிர் எழுத்து மாங்கனிகள் அழகாய் ஆடின.

அரங்கத்தின்வரிசையில் அனைவரையும் எதிர்நோக்கிய குழந்தை. குழந்தையின் முகத்தைத் தவிர வேறெதையும் பார்க்காதவர்களாய் அவனும் அவளும். பெரிய பொருளை மட்டுமே கண்களில் தடவிட்டு சிறியதைச் சிறிதும் பாராமல் சென்ற பார்வையாளர்.

***“இவைகள் தமிழ் உயிரெழுத்துகள். மொத்தம் பன்னிரண்டு. இதில் குறில் ஐந்து நெடில் ஏழு. இவைகள் குறில் இவைகள் நெடில். திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தாள் குழந்தை. சுற்றிவந்தவர்கள் அவளின்***

***மொழிகளைக் கேட்கவில்லை. அங்கு தொங்கிய மொழிகளைப் பார்க்கவும் இல்லை. எதிர் நோக்கி நெடுநேரம் நின்றிருந்த குழந்தை சோர்ந்து போனாள். கூட்டம் முடியுமளவிற்குச் சென்றுவிட்டது. இறுதியில் தன்னருகில் நின்றிருந்த வகுப்புத் தோழியிடம். "இவைகள் தமிழ் உயிரெழுத்துகள்...."*** சொல்லிமுடித்தாள் குழந்தை.

ஏதோ செய்துவிட்ட திருப்தியில் அவளும் அவனும்.சொன்னதைச் சொல்லிவிட்டோம் என்ற நினைப்பிலும் எதையோ எதிர்நோக்கிய குழந்தை.

நிறைவு விழாவில் ஒரு மணிநேரம் கலந்துகொண்ட மகிழ்ச்சியில்அவர்கள். போகலாமாடா செல்லம்...? இல்லப்பா பங்சன் முடியட்டும்பா... சரிம்மா... இரண்டு மணிநேர முடிவில் ஜனகன மனகதி... கூட்டம் கலைந்தது. தூங்கிய குழந்தையைத் தூக்கிக் கொண்ட அவன். வண்டியை எடுக்கச்சென்ற அவள். விழித்துக்கொண்ட குழந்தை. அப்பா நமக்குப் பரிசு தருவாங்கப்பா.... மௌனமாய் அவன்... ஏன்பா நமக்குப் பரிசு தரல...? பரிசு வாங்கிட்டுப் போலாம்ப்ப்ப்பா....

*இல்லம்மா... எப்பவும் எனக்கு நீ தான்டா பரிசு..... உனக்கு அப்பா வாங்கித் தரன்டா பரிசு.. வாடா போகலாம். என்று சமாதானமாய் அழைத்துச் சென்றான் அவன். அவனது உள்ளத்து வலிகளையும். குழந்தை ஏமாற்றத்தையும் வண்டிகளில் ஏந்திவந்தாள் அவள். காகிதங்கள் வாங்கிய கடையில் நின்றது வண்டி.*

**யாழ்மொழி**

தமிழ்த்துறை

**மாணவர்கள் தங்களின் சுய படைப்புகளை மட்டுமே விடியல் இதழுக்கு அளிக்கும் படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்**

**-ஆசிரியர்**